இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 28-09-2024

# 471 நாட்கள்

ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு, பிணை வாங்கும் உரிமையைக் கூடத் தடுத்து 15 மாத காலம் சிறை வைத்திருந்தது அமலாக்கத்துறை. 471 நாட்கள் சிறையில் இருந்த அவருக்கு உச்சநீதிமன்றம் பிணை வழங்கியது. நீதிபதிகள் அபய் எஸ்.ஓஹா, அகஸ்டின் ஜார்ஜ் மாயிஷ் அமர்வு அளித்த தீர்ப்பின் மூலமாக செந்தில் பாலாஜி வெளியில் வந்திருக்கிறார்.

2023 ஆம் ஆண்டு ஜூன் 14ஆம் தேதி கைது செய்யப்பட்ட செந்தில் பாலாஜி, 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் தேதி பிணையில் வெளியில் வந்துள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, “எமர்ஜென்சி காலத்தில் கூட இவ்வளவு நாட்கள் சிறை வாழ்க்கை கிடையாது” என்பதுதான் உண்மை. எமர்ஜென்சி காலத்தில் சிறை வாழ்க்கை என்பது ஓராண்டு காலம்தான். அதையும் தாண்டிய அளவுக்கு விசாரணைக் கைதியாகவே உள்ளே வைக்கப்பட்டார் செந்தில் பாலாஜி.

“ஜாமீன் வழங்குவது என்பது விதிமுறைகளில் ஒன்றாகும். சிறையில் வைத்திருப்பது விதிவிலக்குகளாகவே இருக்க வேண்டும்” என்று செந்தில் பாலாஜி வழக்கின் தீர்ப்பில் மீண்டும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி உள்ளது. “விசாரணை இன்றி ஒருவரை நீண்ட காலம் சிறையில் வைத்திருக்க முடியாது. அமலாக்கத் துறை பணப் பரிவர்த்தனை சட்டம் பிரிவு 45 (1) ஐ அதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தி நீண்ட காலமாக சிறையில் வைப்பது நியாயமற்றது. அதனை ஏற்க முடியாது” என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

**★ செந்தில் பாலாஜியை தொடர்ந்து சிறையில் வைத்திருப்பது அரசியல் சாசனப் பிரிவு 21க்கு எதிரானது. அடிப்படை உரிமையை மீறுவதாகும்” என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. “ செந்தில் பாலாஜி 15 மாதங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தற்போதைய அமலாக்கத்துறை உள்ளிட்ட வழக்குகளை நடத்தி முடிக்க மூன்று முதல் நான்கு ஆண்டுகளுக்கும் மேல் ஆகும். அதற்குள் விசாரித்து முடிக்க வாய்ப்பில்லை. அதற்கு மேல்கூட ஆகலாம். எனவே தொடர்ந்து சிறையில் வைத்திருப்பது அரசியல் சாசனப் பிரிவு 21 ன் படி அடிப்படை உரிமைக்கு எதிரானது” என்று கூறி உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது. இவை தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வழக்கின் தன்மைக்குள் நாம் போக விரும்பவில்லை. அது நீதி மன்றத்தின் இறுதித் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறது. அப்படி ஒரு வழக்கை வைத்து, செந்தில் பாலாஜிக்கு எத்தகைய கொடூரத்தை அமலாக்கத்துறை மூலமாக பா.ஜ.க. அரசு அரங்கேற்றியது என்பது அச்சம் தருவதாகும். இது செந்தில் பாலாஜிக்கு மட்டும் நடந்த தனிப்பட்ட செயலாகப் பார்க்க முடியாது. ‘நாங்கள் நினைத்தால் யாரையும் கைது செய்வோம், பிணை வழங்க விடாமல் வாழ்நாள் எல்லாம் சிறை வைப்போம்’ என்று காட்டுகிறது பா.ஜ.க. தலைமை.

முதலமைச்சர் பதவியில் இருக்கும் போதே டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டார். முதலமைச்சர் பதவியில் இருக்கும் போதே ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டார். துணை முதலமைச்சர் பதவியில் இருக்கும் போதே டெல்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா கைது செய்யப்பட்டார். அமைச்சர் பதவியில் இருக்கும் போதே செந்தில் பாலாஜியும் கைது செய்யப்பட்டார். இவர்கள் அனைவரும் விசாரணைக்கு ஒத்துழைத்தவர்கள்தான். ஆனாலும் ஜாமீன் கொடுக்க விடாமல் முடிந்த வரை அமலாக்கத்துறையால் தடுக்கப்பட்டார்கள். ஒவ்வொரு முறையும் உச்சநீதிமன்றம்தான் அமலாக்கத்துறையின் உச்சந்தலையில் கொட்டியது.

**“விசாரணையின்றி நீண்ட காலம் ஒருவரை அமலாக்கத்துறை சிறையில் வைக்கக் கூடாது. சட்டபூர்வமான ஜாமீன் உரிமையை மறுக்கக் கூடாது. விசாரணையின்றி நீண்ட காலம் ஒருவரை அமலாக்கத்துறை சிறையில் வைக்க முடியாது. குற்றப்பத்திரிக்கையைத் தாக்கல் செய்யாமல் ஒருவரை நீண்ட காலம் சிறையில் வைக்க முடியாது. ஜாமீனைத் தடுப்பதற்காக குற்றப் பத்திரிக்கையை தாக்கல் செய்யாமல் இருக்கக் கூடாது” என்றும் உச்சநீதி மன்றம் கடந்த மே மாதம் ஒரு வழக்கில் எச்சரித்தார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.**

**செந்தில் பாலாஜிக்கு பிணை கேட்கும் வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த போது, அவர் தரப்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், “செந்தில் பாலாஜியை பா.ஜ.க.வில் சேரச் சொல்லி அமலாக்கத்துறை அதிகாரிகள் கட்டாயப்படுத்துகிறார்கள்” என்று குற்றம் சாட்டினார். அதனை அமலாக்கத்துறையும் மறுக்கவில்லை. பா.ஜ.க. தலைமையும் மறுக்கவில்லை.**

பெரிதாகப் பேசப்படும் டெல்லி கலால் கொள்கை வழக்கில், “100 கோடி ரூபாய் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது என்றால் அந்தப் பணம் எங்கே? அதற்கான ஆதாரம் எங்கே?” என்று கேட்டது உச்சநீதிமன்றம். இதுவரை அமலாக்கத்துறையால் ஆதாரத்தைத் தர முடியவில்லை. “இந்த வழக்கில் இதுவரை ஏதாவது சொத்து முடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?” என்று நீதிபதிகள் கேட்டார்கள். பதில் சொல்ல முடியவில்லை அமலாக்கத்துறையால். இவைதான் இது போன்ற வழக்கின் தன்மைகள் ஆகும். பா.ஜ.க. தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்காக ஜோடிக்கும் வழக்குகள் இவை என்பதற்கு இதற்கு மேல் ஆதாரம் தேவையா?

மதுபானக் கொள்கை வழக்கில் தொடர்புடைய ஒரு நிறுவனம், பா.ஜ.க.வுக்கு 55 கோடி தேர்தல் நிதியாக கொடுத்துள்ளது என்று ‘ஆம் ஆத்மி’ குற்றம் சாட்டியது. அதற்கும் பா.ஜ.க. தலைமையால் பதில் அளிக்க முடியவில்லை.

**“பா.ஜ.க. அரசு சோதனை நடவடிக்கைகள் நடத்திய 30 நிறுவனங்கள் மூலமாக 335 கோடி ரூபாயை தேர்தல் நிதியாகப் பெற்றுள்ளது” என்று காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜெயராம் ரமேஷ் சொன்னார். அதற்காவது பதில் சொன்னார்களா என்றால் இல்லை. ‘வேட்டைக்குப் பயன்படுத்துகிறார்கள்’ என்று அரசியல் தலைவர்கள் குற்றம் சாட்டுவதை பா.ஜ.க.வால் மறுக்க முடியுமா?**

“முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தொடர்புடைய வழக்கில் விசாரணையையே தொடங்காமல் சிறை வைப்பது உயிருக்கும் தனிப்பட்ட சுதந்திரத்துக்கும் பாதுகாப்பை வலியுறுத்தும் அரசியல் சட்ட பிரிவுக்கே எதிரானது” என்று உச்சநீதிமன்றம் சொல்லியிருப்பதன் மூலமாக, 471 நாட்கள் சித்திரவதைக்கு உள்ளானது இந்த நாட்டின் சட்டமும், நீதியும் தனிமனித உரிமையும்தான்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.9.2024) புதுதில்லியில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.9.2024) புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது மக்களவை கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்றக் கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் உடனிருந்தனர்.

# இலங்கைத் தமிழர்களுக்கு வேண்டும் விடியல்!

## “ஆனந்த விகடன்” தலையங்கம்!

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி முன்னணி வேட்பாளரான அநுர குமார திசாநாயக்க வெற்றி பெற்று அந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருக்கிறார். ‘ஊழலை ஒழிப்போம்’ என்ற அவரின் முழக்கம், இளைஞர்களை அவருக்குப் பின்னால் அணிதிரள வைத்திருக்கிறது. கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கிய அந்த தேசத்தில் உணவுப் பொருள்களின் விலைகூட தாறு மாறாக உயர்ந்து மக்களை வதைத்தது. இலங்கை சந்தித்துவரும் எல்லா சவால்களுக்கும் அநுர குமார தீர்வு கொடுப்பார் என்று நம்பி மக்கள் அவரிடம் அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்மீது நம் நாட்டிலும் பல எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளை மீட்டெடுக்கவும், கண்ணியமான வாழ்க்கை வாழவும் அவர் வழி செய்வாரா? இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்பட்டு வரும் தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்புக்கு உறுதி அளிப்பாரா? இடதுசாரிக் கொள்கைகளில் வேர்விட்ட கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும், சீனாவின் பக்கம் சாயாமல் தொப்புள்கொடிச் சொந்தமாக விளங்கும் நம்மோடு நல்லுறவைத் தொடர்வாரா?

இலங்கை கடும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்த நேரத்தில், அந்த நாட்டுக்கு உதவிக்கரம் நீட்டி நிலைமையின் தீவிரத்தைத் தணிக்க உதவியது இந்தியா. இலங்கை அரசியலில் இதுவரை ஆதிக்கம் செலுத்திய ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோர் இந்தியாவின் நண்பர்களாகவே இருந்தனர். இலங்கை அரசியலில் அநுர குமார ஒரு சக்தியாக உருவெடுக்கிறார் என்று உணர்ந்ததும், பல மாதங்களுக்கு முன்பாகவே அவரை நம் அதிகாரிகள் இந்தியாவுக்கு அழைத்துச் சந்தித்தனர். இந்தியா வுக்கும் இலங்கைக்குமான நல்லுறவின் ஆழம் குறித்து அவருக்கு அப்போது புரிய வைக்கப்பட்டது.

அநுர குமார திசாநாயக்கவின் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனா, கடந்த 1 காலங்களில் ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயல்பட்ட சிங்களப் பேரினவாதக் கட்சியாகும். அதனாலேயே தமிழர் பகுதிகளில் அவருக்கு ஆதரவு இருக்கவில்லை. இலங்கைத் தமிழர் கட்சிகள் பலவும் இணைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு தன் ஆதரவை சஜித் பிரேமதாசவுக்கு அளித்திருந்தது. இன்னொரு அணியினர் பிரிந்து தனி வேட்பாளரையும் நிறுத்தியிருந்தனர். இவர்களைத் தாண்டி அநுர குமாரவுக்குத் தமிழர் பகுதியில் வாக்குகள் விழவில்லை.

எனினும், கடந்த 40 ஆண்டுகளில் இனவாத முழக்கத்தை எழுப்பாமல் தேர்தல் பிரசாரம் செய்து வென்றவர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார் அநுர குமார். அந்த இணக்கத்தை ஆட்சிக்காலம் முழுக்க அவர் வெளிப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு முற்றாகக் காணாமல் ஆக்கப்பட்ட பிறகும் இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. யுத்தம் முடிந்து 15 ஆண்டுகளாகியும் அரசியல் கைதிகளாகத் தமிழர்கள் பலர் சிறைகளில் வாடுகிறார்கள். ஈழத்தில் தமிழர்களின் நிலங்கள் பலவும் இன்னமும் ராணுவத்தின் உயர் பாதுகாப்பு வளையத்தில் இருக்கிறது. அங்கு அதிக அளவில் ராணுவத்தினர் குவிக்கப்பட்டு இருப்பது, இயல்பு வாழ்வை பாதித்திருக்கிறது. இந்நிலை மாறி இலங்கைத் தமிழர்களுக்கு விடியல் ஏற்பட வேண்டும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான முதலீடுகளையும் வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்துவது போல, தமிழர்கள் இணக்கமாக வாழ்வதற்கான சூழலையும் ஏற்படுத்த வேண்டும். இன்னொரு பக்கம், தமிழக மீனவர்கள் மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்களும் நிறுத்தப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்களின் இந்த எதிர்பார்ப்புகளை புதிய அதிபர் அநுர குமார நிறைவேற்ற வேண்டும்.



**நன்றி: ஆனந்த விகடன்**



சி. பா. ஆதித்தனார் அவர்களின் 120 – வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் எர்ணாவூர் அ. நாராயணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

